கருக்கம்

பள்ளிக் கல்வி – பள்ளியில் பயிலும் கண்பார்வையற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் போன்று ஆன்லைன்–ல் விண்ணப்பிக்கும் கண்பார்வையற்ற தனித் தேர்வர்களுக்கும் செப்டம்பர் 2013–ம் பருவம் முதல் தேர்வு கட்டணத்திலிருந்து விலக்கு அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது

பள்ளிக் கல்வி(ஜிஇ (1))துறை

அரசாணை (டி) எண். 220 நாள்: 09.07.2013

திருவள்ளுவர் ஆண்டு 2044,
விஜய வருடம், ஆனி 25

படிக்கப்பட்டவை:--

அரசு தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண்.003400/ எச்1/2013, நாள் 24.01.2013.

-----

ஆணை

மேலே படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் அரசுத் தேர்வுகள் இயக்குநர் மார்ச் 2013, மேல்நிலைத் தேர்விற்கு தனித்தேர்வெழுதும் மாணவர்கள் Online மூலம் விண்ணப்பித்துள்ளனர் என்றும், இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் தனித் தேர்வர்களுக்கென அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதில் தனித்தேர்வெழுதும் அனைவரும் தேர்வுக் கட்டணம் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், சென்னை, நேத்ரோதயா நிறுவனர், திரு.சி.கோவிந்தகிருஷ்ணன் அவர்கள் இணையதளத்தின் மூலம் Online-ல் விண்ணப்பிக்கும் மாற்றுத் திறனாளிகளான பார்வையற்றோர்களுக்கு அறிவுரை ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றும், பள்ளியில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப்போல் Online-ல் விண்ணப்பித்து தனித்தேர்வெழுதும் பார்வையற்றோர்களுக்கும், தேர்வுக் கட்டணத்திலிருந்து விலக்கு அளிக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து, மேற்காண் பார்வையற்றோர் சார்பாக கோரப்படும் கோரிக்கையினை பரிசீலித்து கண்பார்வையற்ற தனித்தேர்வர்களுக்கும் தேர்வுக் கட்டணத்திலிருந்து முழுமையாக விலக்கு அளித்து அரசாணை வழங்குமாறு அரசு தேர்வுகள் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலும், கடந்த அக்டோபர் 2012ல், தனித்தேர்வர்கள் Online-ல் முதன்முறையாக விண்ணப்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது என்றும், இணையதளத்தில் வெளியிடப்பட்ட விண்ணப்பத்தின் வடிவமைப்பில், அச்சமயம் எவ்வித விமர்சனமும் எழவில்லை என்றும், எனவே மார்ச் 2012 பருவத்தில் எவ்வித மாறுதலுமின்றி அதே விண்ணப்பப் படிவம் இணையதளத்தில் வெளியிடப்பட்டது என்றும், மாற்றுத் திறனாளிகளுக்கான சலுகைகளை ஆன்–லைன் விண்ணப்பத்தில் இடம்பெறச் செய்திட செப்டம்பர் 2013 பருவம் முதல் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசு தேர்வுகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. அரசு தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலித்து அதனை ஏற்று பள்ளியில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளைப் போல் ஆன்லைன்-ல் விண்ணப்பிக்கும் கண்பார்வையற்ற தனித்தேர்வர்களுக்கும் தேர்வுக் கட்டணத்திலிருந்து முழுமையாக விலக்கு அளித்தும், மாற்றுத் திறனாளிகளுக்கான சலுகைகளை, செப்டம்பர் 2013-ம் பருவம் முதல் ஆன்-லைன் விண்ணப்பத்தில் இடம்பெறச் செய்திட அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.34120/கல்வி-II/2013 நாள் 02.07.2013-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-6.
மெட்ரிக்குலேசன் பள்ளி இயக்குநர், சென்னை-6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,சென்னை-6.
சமூக நலத்துறை இயக்குநர், சென்னை-5.
ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர்,
15/1 மாதிரிப்பள்ளி ரோடு, சென்னை-6.
நகல்
நிறுவனர்,
நேத்ரோதயா, சென்னை-37
சமூக நலத்துறை, சென்னை - 9.
சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, சென்னை - 9.
அமைச்சர் (பள்ளிக்கல்வி) அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை-9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.